பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:37 22.12.2023 வெள்ளிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

WILD FOREST FOUNDATION
wild-forest.org




## முல்லைத்தீவில் அடை மழை 6916 பேர் பாதிப்பு


சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்யும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் **2327** குடும்பங்களைச் சேர்ந்த **6916** பேர் பாதிக்கப்பட்டனர்.


**412** குடும்பங்களைச் சேர்ந்த **1215** பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் மழை சற்று குறைவடைந்த நிலையில் வெள்ளநீர் வடிந்தோடிய நிலையில் ஏழு இடைத்தங்கல் முகாம்களின் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டிருந்த **412** குடும்பங்களைச் சேர்ந்த **1215** பேரும் அவர்களது வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

## தொண்டமானாறு வான் கதவு திறப்பு

வளிமண்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் பெய்துவரும் கன மழை காரணமாக தொண்டமானாறு வான் கதவுகள் இன்று **(22.12.2023)** யாழ்ப்பாண மாவட்ட நீர்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களினால் திறந்து விடப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக தேக்கிவைக்க முடியாத மேலதிக நீரினை பெரும் கடற்பரப்பில் செல்லுவதற்கு திறந்து விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.




## ஜனாதிபதித் தேர்தலில் விக்கி?

தமிழ்க் கட்சிகள் ஒருமித்து அழைத்தால் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன் என தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று **(21.12.2023)** வியாழக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விடுவது சிறந்ததா? அல்லது ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்தி எமது பலத்தைக் காட்டுவது சிறந்ததா? என பார்த்தால் தமிழர் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவது என்பது எனது விருப்பம்.

நான் அரசியலில் ஈடுபாடு... **(பக்:02)**

## யாழ்ப்பாணத்தில் ரெலிக்கொம் ஊழியர்கள் போராட்டம்

ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தை தனியார் மயமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியிலுள்ள ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் அலுவலகத்திற்கு முன்பாக இன்று **(22)** ரெலிக்கொம் நிறுவன ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நிறுவன பங்குகளை விற்பனை செய்வது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் அமுல்படுத்துகின்ற அரசுக்கு சொந்தமான நிறுவனங்களை தனியார் மயமாக்குதலுக்கு எதிராகவும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், இலாபம் ஈட்டும் தொலைத்தொடர்பு நிறுவனத்தை தனியார் மயமாக்குவதை நிறுத்து, தேசிய வளங்களை விற்பதை நிறுத்து, பொருளாதாரத்தை மேம்படுத்துவதாகக் கூறி நாட்டின் வளங்களை விற்பனை செய்வதற்கு இடமளிக்க முடியாது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அரசுக்கு எதிராக கோஷமிட்டனர்.

## காஸா மக்களுக்கு தற்காலிக விஸா கனடா அறிவிப்பு

இஸ்ரேல், ஹமாஸ் போரினால் காஸா மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கனடா நாட்டினரின் உறவினர்கள் காஸா பகுதியில் இருந்து, எங்கள் நாட்டில் குடியேற தற்காலிக விஸாக்களுக்கு விண்ணப்பிக்கலாம் என கனடா தெரிவித்துள்ளது.

ஆனால், இஸ்ரேல் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட காஸாவில் இருந்து வெளியேற நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது.

இத்திட்டம் ஜனவரி 9 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என எதிர்பார்ப்பதாக அந்நாட்டின் குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

தற்போது வரை 660 கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள், நிரந்தரமாக வசித்து வருபவர்கள், அவர்களுடைய மனைவிகள் மற்றும் குழந்தைகளை காஸாவில் இருந்து அழைத்து வர அரசு கவனம் செலுத்துகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் கைது

வவுனியாவில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் 16 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் இன்று (22) தெரிவித்தனர்.

பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து விசேட போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

அதற்கு அமைய வவுனியாவில் நேற்று (21) இரவு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக உள்ள வியாபார நிலையம் ஒன்றில் விசேட அதிரடிப்படையினர், பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், வியாபார நிலையத்தின் உரிமையாளரது தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வீட்டிலும் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 16 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் விக்கி....

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இல்லாமல் இருந்த போது பலரின் வற்புறுத்தலின் பேரில் மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக வந்தேன். வந்தபின் என்னையே அப்புறப்படுத்தும் வேலைகளை எம்மவர்களே செய்தார்கள் மக்களின் ஆதரவினால் தப்பினேன்.

ஆகவே தமிழ்க்கட்சிகள் இணைந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்ந்து பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு கோரினால் அப்போதைய கள நிலவரங்களைப் பார்த்து பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன் என அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதியினால் 12 புதிய நியமனங்கள்

பத்து அமைச்சுக்கான செயலாளர்கள், இரண்டு மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்கள் ஆகியோருக்கான நியமனங்கள் இன்று (22) காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த நியமனங்கள் எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய ஒளிவிழா

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய ஒளிவிழா நேற்று மாலை பக்குத்தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. முள்ளியான் சேவகர் கி.சுபகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# மரக்கறியின் விலையை நிர்ணயம் செய்வது யார்?

மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்ந்துள்ளது. தொடர் மழை, போக்குவரத்து பாதிப்பு, மழை வெள்ளத்தால் பயிர் அழிவு போன்றவற்றால் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலைமைகள் நாடு முழுவதும் காணப்படுவதால் காய்கறிகளின் விலைகள் அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளன.

பல காய்கறிகளில், இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் விலைகள் கடந்த மாதத்தில் கணிசமானளவு உயர்ந்துள்ளது. மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் பொதுமக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள சந்தைகளில் பாகற்காய் கிலோ 600 ரூபாவுக்கும், பச்சைமிளகாய் கிலோ 1600 ரூபாவுக்கும், கத்தரிக்காய் கிலோ 600 ரூபாவுக்கும், தக்காளி கிலோ 800 ரூபாவுக்கும், பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவுக்கும் விற்பனையாகின்றன.

தற்போது சந்தையில் சில மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்துகின்றனர் போஞ்சி, கரட், லீக்ஸ் மற்றும் முள்ளங்கி போன்ற மரக்கறிகள் கிலோ ஒன்று 400 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. அத்துடன், ஒரு கிலோகிராம் தக்காளி 500 ரூபாவாகவும் ஒரு கிலோகிராம் பச்சைமிளகாய் ஆயிரம் ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளிடம் கொள்வனவு செய்யப்படுகின்ற விலையை விட அதிகரித்த விலையிலேயே மரக்கறிகள் விற்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் மொத்த மற்றும் சில்லறை பழங்கள் மற்றும் காய்கறி விற்பனையாளர் ஒருவர் நுவரெலியா, பதுளை, பண்டாரவளை, தலவாக்கலை உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தை கொள்வனவு செய்த அவர், தனது 40 வருட வியாபாரத்தில் இந்த வருடத்திற்கு நிகரான விலை உயர்வைக் காணவில்லை.

"ஒவ்வொரு நாளும் விலைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன, மேலும் எனது வழக்கமான வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு விலைகளில் காய்கறிகளை விற்க முடியாது, அதனால் நான் ஒரு கிலோ வெங்காயத்தை ரூ. 480 மற்றும் விற்பனை ரூ.280. நான் ஒரு நாளைக்கு சுமார் இரண்டு முதல் மூன்று லட்சம் வரை நஷ்டத்தை எதிர்கொள்கிறேன்," என்று கூறினார், அவர் அதிக விலைக்கு விற்றால், அவர் தற்போது சம்பாதித்த வருமானத்தைப் பெற முடியாது.

வெங்காயம் இறக்குமதி குறித்து பெயர் வெளியிட விரும்பாத விற்பனையாளர்கள் கருத்து தெரிவித்தனர். அவர்கள் கூறுகையில், "இந்தியாவில் மழையால் பாதிக்கப்படாத மற்ற பகுதிகளும் போதுமான அளவு விளைச்சலைக் கொண்டுள்ளன. சில மொத்த வியாபாரிகள் வெங்காயத்தை ரூ.10க்கு விற்க தயாராக உள்ளனர். ஒரு கிலோ 140, ஆனால் அவற்றை இறக்குமதி செய்வதற்கான உரிமம் எங்களிடம் இல்லை.

ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (HARTI) தரவு முகாமைத்துவ நிலையத்தின் தலைவர் பிரசன்ன விஜேசிங்க தெரிவிக்கையில், "பண்டிகைக் காலங்களில் பொதுவான தேவை காணப்பட்டாலும், இம்முறை தேவை 25% - 30% வரை குறைவடைந்துள்ளது.

"தார் மொத்த விற்பனையாளர்கள் சந்தைக்கு வராமல் இருப்பதை நாங்கள் காண்கிறோம், ஏனெனில் காய்கறிகளுக்கான நுகர்வோர் தேவை அதிகம் இல்லை, ஏனெனில் விலைகள் அதிகரித்து வருவதால் காய்கறிகளை வாங்குவதற்கு அவர்களிடம் போதுமான பணம் இல்லை, விஜேசிங்க கூறினார்.

பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்ததால், அதனைப் பாவிப்பவர்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. சைவ சமய பண்டிகைக்காலங்களில் மரக்கறியின் விலை கண்டபடி உயர்கிறது. அதனைக் கட்டுப்படுத்துவது யாரென்பதில் எந்த வித வழிமுறையும் இல்லை. மரக்கறிக்கு விலைக்கட்டுப்பாடு எதுவும் இல்லை. மரக்கறியின் விலையை நிர்ணயம் யாரென தெரியாத நிலை உள்ளது. இதனை மாற்றியமைக்க யார் முன் வருவார்கள் என்பதே மக்களின் கேள்வியாகும்.

# சீன இறக்குமதிக்கு உயர்ந்த வரி



சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எலெக்ரிக் வாகனங்கள் உள்ளிட்ட பொருட்கள் மீதான வரியை உயர்த்த திட்டமிட்டு வருகிறது அமெரிக்கா.

டொனால் ட்ரம்ப் பதவியில் இருந்தபோது சீன பொருட்கள் மீதான இறக்குமதி விதிக்கப்பட்டு, ஜோ பைடன் பதவியேற்ற பிறகு அது 25% ஆக உயர்த்தப்பட்டது.

சீனாவிலிருந்து கிட்டத்தட்ட 300 பில்லியன் டொலர்கள் அளவிலான பொருட்களை அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றுக்கான வரியை அடுத்த ஆண்டு மறுசீரமைப்பு செய்து உயர்த்த பரிசீலனை செய்து வருகிறது அமெரிக்கா.

முக்கியத்துவமான சில பொருட்கள் மீது வரியை உயர்த்தவிருக்கும் நிலையில், முக்கியத்துவமில்லாத சில சீன இறக்குமதிப் பொருட்கள் மீதான வரியைக் குறைக்கவும் திட்டமிட்டிருக்கிறது அமெரிக்கா.

# கனடா - இந்தியா உறவுகளில் மாற்றம் ஜஸ்டின் ட்ரூடோ

காலிஸ்தான் பிரிவினைவாதியான குர்பத்வந்த் சிங் பன்னுனைக் கொலை செய்ய இந்தியர் முயன்றதாக, அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கு பின்னர் இந்திய-கனடா உறவுகளில் மாற்றம் நிகழ்ந்துள்ளதாக கன்னட பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜூன் மாதம் கனடாவில் காலிஸ்தான் பிரிவினைவாதியான நிஜார் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கொலையில் இந்திய அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதற்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக, அந்நாட்டின் பிரதமர் குற்றம் சாட்டினார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை இந்தியா மறுத்திருந்தது. இந்த மாதத்தின் தொடக்கத்தில் அமெரிக்க-கனடா குடியுரிமை பெற்ற மற்றொரு காலிஸ்தான் பயங்கரவாதியான குர்பத்வந்த் சிங் பன்னுனை, அமெரிக்காவில் இந்தியர் ஒருவர் கொலை செய்ய முயன்றதாக அந்நாடு குற்றம் சாட்டியிருந்தது.

இந்நிலையில், அண்மையில் நடந்த நேர்காணலில் அமெரிக்காவின் குற்றச்சாட்டுகள் குறித்து, ஜஸ்டின் ட்ரூடோ பேசியுள்ளார்.

# துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் பலி

செக் குடியரசின் தலைநகர் ப்ராக் நகரிலுள்ள பல்கலைக்கழகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில், 25 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நவீன செக் குடியரசு நாட்டின் வரலாற்றில் பதிவான, மிகவும் மோசமான துப்பாக்கிச் சூடுகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கொடூரத் தாக்குதலில் ஈடுபட்ட டேவிட் கோசாக், உயிரிழந்ததாக காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்ட டேவிட் கோசாக் அவர் சொந்த ஊரான ஹோஸ்டவுன் பகுதியில் உள்ள வீட்டில், அவரது தந்தையையும் சுட்டுக்கொன்றார்.

ஜன் பலாச் சதுக்கத்தில் உள்ள பல்கலைக்கழக கலை பீட கட்டடத்தில், உள்ளூர் நேரப்படி சுமார் 15:00 மணிக்கு துப்பாக்கிச்சூடு தொடங்கியது.

# பிணைக் கைதிகளை விடுவிக்க மறுப்பு

இஸ்ரேல், ஹமாஸ் ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்றுவரும் போரை, முழுவதுமாக நிறுத்த இஸ்ரேல் ஒப்புக்கொள்ளும் வரை, பணயக்கைதிகளை மேலும் விடுவிக்க முடியாது என ஹமாஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு நவம்பர் மாதத்தின் இறுதியில் அறிவிக்கப்பட்ட ஏழு நாட்கள் போர் நிறுத்தம், இரு தரப்பினருக்கும் பலனளித்த நிலையில், போர் நிறுத்தத்தை மீண்டும் ஏற்படுத்த எகிப்து தலைநகர் கெய்ரோவில் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இந்தப் பேச்சு வார்த்தையில், போரில் மற்றொரு தற்காலிக இடை நிறுத்தத்திற்கு சம்மதிக்க மாட்டோம் என்று ஹமாஸ் தொடர்ந்து தெரிவித்து வருகிறது.

# மாந்தையில் சிறு வியாபாரிகளை வலுவூட்டும் செயற்றிட்டம்




உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் சிறு வியாபாரிகளை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் ஊடாக பயனாளிகளுக்கு மூன்றாம் கட்ட உலர் உணவுப் பொருட்களை வழங்கும் நிகழ்வானது மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பூவரசன்குளம், பாலி நகர் மற்றும் செல்வபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# போதைமாத்திரை வியாபாரம் செய்தவர் கைது




முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களையும் இலக்கு வைத்து போதை மாத்திரை வியாபாரம் செய்து வந்த நபர் ஒருவர் 300 போதை மாத்திரைகளுடன் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார். புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.பி.ஆர் கேரத்துக்குக் கிடைத்த தகவலையடுத்து நேற்று (21) புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.பி.ஆர். கேரத் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். நடவடிக்கையின் போது குறித்த சந்தேக நபர் 300 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் புதுக்குடியிருப்பு பகுதியில் பல்வேறு பட்ட இடங்களில் போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் சந்தேக நபரையும் போதை மாத்திரைகளையும் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர்.

# தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு விழா

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு விழா நாளை சனிக்கிழமை (23) பிற்பகல் மாலை 3 மணிக்கு வேம்படி வீதியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் தாயகம் சஞ்சிகையின் ஆசிரியருமான க.தணிகாசலத்தின் தலைமையில் நடைபெறும். சோ. பத்மநாதன் (சோ. ப), ந.பார்த்தீபன், சோ. தேவராஜா, சிவ.இராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரையாற்றுவார்கள்.

# போதைப்பொருள் வர்த்தகம் ஒடுக்கப்படும்

போதைப்பொருள் வர்த்தகத்தையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்கும் நடவடிக்கைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பூரண ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அதனால் எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் போதைப் பொருள் வர்த்தகத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நாட்டிற்கு பெரும் கேடாக விளங்கும் போதைப் பொருள் பாவனையையும் பாதாள உலக செயற்பாடுகளையும் ஒடுக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். ஜனாதிபதி



ஊடக மையத்தில் இன்று (21) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு தெரிவித்தார்.

# அன்றலர்ந்த மலர்கள் நூல் வெளியீடு

புலோலியூர் ஆர்.இரத்தினவேலோன் எழுதிய அன்றலர்ந்த மலர்கள் நூல் வெளியீடும், எழுத்தாளர் கௌரவிப்பும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு புற்றளை மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் க.பரணீதரனின் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கோகிலா மகேந்திரன் கலந்துகொள்வார்.

மு.கனகலிங்கம் அறிமுக உரையையும் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன் சிறப்புரையையும் கு.வசீகரன் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார்கள். கருத்துரையை புலோலியூர் வேல்நந்தன் நிகழ்த்துவார்கள்.

# பெரிய வெங்காயத்தின் தேவை குறைந்துள்ளது

பெரிய வெங்காயத்தின் விலை வேகமாக உயர்ந்து வருவதால், நுகர்வோரின் பெரிய வெங்காயத்தின் தேவை வேகமாக குறைந்து வருவதாக வணிகர்கள் மற்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். பெரிய வெங்காயத்தின் விலை உயர்வால் அதன் தேவை படிப்படியாக குறைந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

புறக்கோட்டை மெனிங் பொது வர்த்தக ஊழியர் சங்கத்தின் தலைவர் எச்.எம். உபசேனா இது குறித்து கருத்து தெரிவிக்கையில்

கட்டாயமாக வெங்காயத்தின் விலை குறையும். இப்படித்தான் கடந்த காலங்களில் கட்டட நிர்மாணத்துறையில் சீமெந்து விலையை உயர்த்திக்கொண்டே சென்றது.

பின்னர் யாரும் சீமெந்து வாங்கவில்லை. அப்படியே விலையும் குறைந்தது. பிஸ்கட் நிறுவனங்கள் விலையை உயர்த்தியது இறுதியில் குறைந்தது. இதற்கும் நுகர்வோர் நடவடிக்கை எடுத்தால், களஞ்சியசாலைகளில் வெங்காயங்கள் அழுகும். அப்போது வெங்காய விலைகள் தானாக குறையும்" என்றார்.

# பல இலட்சம் பெறுமதியான போதைப்பொருள் நெல்லியடியில் மீட்பு

நெல்லியடி பொலிஸார் நடத்திய திடீர் சோதனையில் பல இலட்சம் பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்று பேர் போதைப் பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது மூன்று சந்தேக நபர்களையும் பதினான்கு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை நேற்று பிற்பகல் போதைப்பொருள் குற்றச்சாட்டு, திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பெண்களும் ஒரு ஆணும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 676500 ரூபா பெறுமதியான கஞ்சா, ஆபத்தான போதைப்பொருட்கள், நூறு லீற்றர் கசிப்பு என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பல்வேறு இடங்களில் திருடப்பட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட கைத்தொலைபேசிகளும், ஐந்து வாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

# போட்டிகளில் இருந்து விலகும் ஒலிம்பிக் வீராங்கனை

மல்யுத்த போட்டிகளில் இருந்து விலகுவதாக ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை சாக்சி மாலிக் அறிவித்துள்ளார், இது விளையாட்டுலகில் பெரும் அதிவலைகளை ஏற்படுத்தி உள்ளது.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவராக பதவி வகித்த வந்த பா.ஜ.க எம்.பி பிரிஜ்பூஷன் சிங்குக்கு எதிராக மல்யுத்த வீராங்கனைகள் அளித்த பாலியல் புகார்கள், நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவருக்கு எதிராக நாட்டின் முன்னணி மல்யுத்த வீரர்கள் மேற்கொண்ட போராட்டம் பெரும் அதிர்வலைகளை கிளப்பின. பஜ்ரங் புனியா, சாக்சி மாலிக், வினேஷ் போகட் உள்ளிட்ட மல்யுத்த வீரர்கள், இந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தினர். பாலியல் புகாரில் சிக்கியுள்ள பிரிஜ்பூஷன் சிங், அவரது குடும்ப உறுப்பினர் யாரும் மல்யுத்த கூட்டமைப்பில் எந்தப் பதவியையும் வகிக்கக் கூடாது என்றும் மல்யுத்த வீரர்கள் வலியுறுத்தினர்.

பெரும் அழுத்தத்தை தொடர்ந்து, இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பதவியிலிருந்து பிரிஜ்பூஷன் சிங் விலகினார். இப்படிப்பட்ட சூழலில், மல்யுத்த கூட்டமைப்பின் அடுத்த தலைவரை தேர்வு செய்ய இன்று தேர்தல் நடத்தப்பட்டது. பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடந்த தேர்தலில் பிரிஜ்பூஷன் சிங்கின் உதவியாளர் சஞ்சய் சிங் வெற்றி பெற்றார்.

மல்யுத்த வீரர்களின் ஆதரவோடு தேர்தலில் நின்ற மல்யுத்த வீராங்கனை அனிதா ஷியோரன் தோல்வி அடைந்தார். இவர், காமன் வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவர்.




கடும் எதிர்ப்புக்கு பிறகும், பிரிஜ்பூஷன் சிங்கின் ஆதரவாளர் வெற்றி பெற்றிருப்பது மல்யுத்த வீரர்களுக்கு பெரும் அதிர்ச்சியை தந்துள்ளது. இந்த நிலையில், மல்யுத்த வீரர்களின் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவரான சாக்சி மாலிக், மல்யுத்த போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் தேர்தல் முடிவுகள் குறித்து அதிர்ச்சி தெரிவித்த சாக்சி மாலிக், "மல்யுத்த கூட்டமைப்புக்கு ஒரு பெண் தலைவர் வர வேண்டும் என்று விரும்பினேன். ஆனால், அது நடக்கவில்லை. நாங்கள் போரிட்டோம். ஆனால், புதிய தலைவராக பிரிஜ் பூஷனின் உதவியாளர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தொழிலில் அவரது கூட்டாளி, எனவே மல்யுத்த போட்டிகளில் இருந்து விலகுகிறேன்" என்றார்.

---

# ஸிம்பாப்வே வீரர்கள் இருவர் இடைநீக்கம்

அயர்லாந்து அணிக்கெதிராக தொடரின் போது தடை செய்யப்பட்ட போதை பொருட்களை பயன்படுத்திய ஆல்ரவுண்டர்களான வெஸ்லி மதவீரா, பிரன்டன் மவுடா ஆகிய இருவரையும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஸிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் அதிரடியான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

போதைப் பொருளை உட்கொண்டதற்காக எடுக்கப்பட்ட சோதனையில் அவர்கள் இருவருக்கும் பாசிட்டிவாக ரிசல்ட் வந்துள்ளதால் ஊக்க மருந்து எதிர்ப்பு விதிகளை மீறி நடந்து கொண்டதாக அவர்கள் இருவரும் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 23 வயதான வெஸ்லி மதவீரா 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக் கோப்பையில் ஸிம்பாப்வே அணிக்காக ஸ்டார் வீரராக விளையாடியிருந்தார். இது வரை 98 சர்வதேச போட்டிகளில் விளையாடி இருக்கும் அவர் மிகச் சிறப்பான வீரராக இருந்து வருகிறார்.

26 வயதான பிரெண்டன் மவுதா ஸிம்பாப்வே அணிக்காக 26 போட்டிகளில் விளையாடியுள்ள அவர் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். வளர்ந்து வரும் நட்சத்திர ஆல்ரவுண்டர்களாக பார்க்கப்படும் இவர்கள் இருவரும் செய்த குற்றம் குறித்து ஸிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், வெஸ்லி மதவீரா, மவுடா இருவரும் சமீபத்தில் நடத்தப்பட்ட ஊக்க மருந்து சோதனையின் போது போட்டிக்கு முன்னதாக தடை செய்யப்பட்ட பொழுதுபோக்கு மருந்தை எடுத்துக் கொண்டதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்கள் இருவரும் ஒழுங்கு விசாரணைக்கு ஆஜராகும் வரை சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் விசாரணைக்கு பிறகே அவர்களது தண்டனை குறித்த உறுதியான முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





---

# ஒலிம்பிக் தொடக்க விழாவை இடம் மாற்ற பிரான்ஸ் தயார்

2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடக்க விழாவை, பாதுகாப்புச் சூழலுக்குத் தேவைப்பட்டால், செயின் நதியிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற பிரான்ஸ் தயாராக உள்ளது என்று ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் புதன்கிழமை தெரிவித்தார்.

இஸ்ரேல்-ஹமாஸ் போருக்கு மத்தியில் இஸ்லாமிய போராளிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வரும் அபாயம் குறித்து ஐரோப்பிய பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர், கண்காணிக்க கடினமாக இருக்கும் "தனி ஓநாய்" தாக்குதல்களால் மிகப்பெரிய



அச்சுறுத்தல் உள்ளது. ஒக்ரோபரில், வடக்கு பிரான்ஸில் உள்ள ஒரு பள்ளியில் ஒரு ஆசிரியரை கத்தியால் தாக்கிய நபர் ஒருவர் கொன்றபோது, பிரான்ஸ் தனது பாதுகாப்பு எல்லையை உயர்த்தியது. இந்த மாத தொடக்கத்தில், நாட்டின் விளையாட்டு மந்திரி, கத்தி மற்றும் சுத்தியலால் ஆயுதம் ஏந்திய ஒரு நபர் ஒரு ஜேர்மன் சுற்றுலாப் பயணியைக் கொன்று ஈபிள் கோபுரத்திற்கு அருகில் இருவரை காயப்படுத்தியதை அடுத்து, "இது நாங்கள் வேலை செய்யவில்லை" என்று கூறியதைத் தொடர்ந்து திட்டங்களை மாற்ற முடியாது என்று நிராகரித்தார்.

160 படகுகள் ஜூலை 26 அன்று பான்ட் டி ஆஸ்டர்லிட்ஸிலிருந்து 6 கிலோமீற்றர் (3.7 மைல்) பயணத்தில் பாரிஸில் உள்ள பான்ட் டி ஐனா என்ற பாலத்திற்குப் புறப்படும் போது சுமார் 600,000 பார்வையாளர்களை பிரான்ஸ் எதிர்பார்க்கிறது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 22.12.2023 அன்று வெளியிடப்பட்டது.